24th July 1964]

சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்தல்

*** 693 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்யும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் எப்போது?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) ஆம்.

(இ) 1969-ம் வருடம் நவம்பர் மாதத்திற்குப் பிறகு.

பாசன வசதி

*** 694 கேள்வி.—திரு. எல். ஆனந்தன்:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டிக்கொண்டிருக்கும் கோமுகி நதி நீர்த் தேக்கத்தில் இருந்து வலதுபுரமாக கால்வாய் அமைத்து பாசன வசதி செய்துகொடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: No.

*** 695 கேள்வி.—திரு. சா. ராமசாமி:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் நந்தியாறு மூலம் நேரடியாகவும், கண்டிராதித்தம் பெரியேரி மூல மாகவும் உள்ள பாசனப் பகுதிகளில் மார்ச் மாதத்தில் தண்ணீர் சரியான முறையில் வராததினுல் 1,500 ஏக்கர் இளம்பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தை அரசாங்கம் அறியுமா?

(இ) சர்க்கார் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The 1,500 acres of lands in Udayarpalayam taluk referred to by the Member are in the single crop area of the Nandiar channel and are not normally entitled to supply from February onwards. However, as a special case, in order to save the standing crops the available supplies were distributed equitably and judiciously this year.

*** 696 கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பிரவருணியில் மழைக்காலத்தில் வீணுகும் தண்ணீ ரைப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற் கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் எவை?

[24th July 1964

(இ) தாம்பிரவருணியில் ஒன்பது கால்வாய்களைப் புதுப்பித்து வலுப்படுத்தும் வேலைகள் அனுமதிக்கப்பட்டுவிட்டனவா ?

(உ) அவ்வேலைகள் எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Three schemes of utilising the waters of Tambaraparani, namely—

(i) Gatana Reservoir,

(ii) Ramanadhi Reservoir; and

(iii) Servalar Scheme are under consideration to utilise the surplus waters of Tambaraparani.

(b) & (c) Remodelling of the North Kodamelalagian, South Kodamelalagian and Kodagan channels have been sanctioned by the Government. The proposal for remodelling the Kannadian channel has been deferred by the Government. The proposals in regard to the remaining five channels are under consideration by the Public Works Department.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வாடர் ரேட் நிலங்களை நஞ்சையாக லோகலைஸ் செய்து கொடுக்கக்கூடிய திட்டத்திற்கும், இந்த சானல்ஸ் ரீமாடல் செய்வதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா ? அப்படியானால், அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தபடி, துரிதமாக கனடியன் சானல் உள்பட எல்லா சானல்கள் சம்பந்தமாகவும் இந்த ஸீஸனிலே அந்த வேலைகளைத் துவக்குவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ரீமாடல் ஸ்கீமை ரொம்ப அவசரப்பட்டு, தக்க பலன் தராத முறையில் செய்துவிட்டு போவதிலே லாபம் இருக்காது. ஏனென்றால், தாம்பரபரணி ஸிஸ்டத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு நல்ல ஸிஸ்டம். அதே நேரத்தில் சிக்கல் நிறைந்த ஸிஸ்டமாக இருக்கிறது. நல்ல முறையில் இன்வெஸ்டிகேஷன் செய்து அந்த ஸிஸ்டத்தை மேலும் பலன் உள்ளதாக, விவசாயத்திற்கு பலன் தரக்கூடிய ஸிஸ்டமாக ஆக்க வேண்டும் என்ற முறையில் நாம் படிப்படியாக ரீமாடலிங் வேலையை நடத்தவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்த ரீமாடலிங் வேலை முறையாக முடியும்பொழுது இன்னும் ஏராளமான நிலங்கள் இந்தப் பாசனத்திற்குள் வரமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நேரத்தில் கனம் அங்கத்தினர் எழுப்பிய லோகலைஸேஷன் ஸ்கீம் அதிலே இணையும். அது இல்லாமலே ரெவின்யூ இலாகாவிலிருந்து லோகலைஸேஷன் ஸ்கீமுக்கு ஒரு விசேஷ அதிகாரி இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். என்ன இருந்தாலும், அவர் தனியாகக் கேள்வி போட்டால், நான் தெரிந்து சொல்ல முடியும்.

Lion Sanctuary

*697 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have dropped the Lion sanctuary scheme; and

(b) if so, the reasons for the same?